www.Padasalai.Net www.TrbTnpsc.com

வகுப்பு : 7

தேர்வு எண் | | | | | | |

# மூன்றாம் பருவம் - தொகுத்தறி மதிப்பீடு(SA)- 2024-25

## தமிழ்

நேரம் : 2.00 மணி] [மொத்த மதிப்பெண்கள் : 60

பகுதி – I

I. சரியான விடையைத் தெரிவு செய்க. 10X1=10

1. மரம் வளர்த்தால் ---------- பெறலாம்.
   அ) மாறி ஆ) மாரி இ) காரி ஈ) பாரி
2. இளங்கோவடிகள் -------- மலைக்கு முதன்மை கொடுத்துப் பாடினார்.
   அ) இமய ஆ) கொல்லி இ) பொதிகை ஈ) விந்திய
3. அணி என்னும் சொல்லுக்கு -------- என்பது பொருள்.
   அ) எழுத்து ஆ) சொல் இ) பொருள் ஈ) அழகு
4. ஞானச்சுடர் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது.
   அ) ஞான + சுடர் ஆ) ஞானச் + சுடர் இ) ஞானம் + சுடர் ஈ) ஞானி + சுடர்
5. உலகம் உண்ண உண்; உடுத்த உடுப்பாய் என்று கூறியவர் --------
   அ) பாரதியார் ஆ) பாரதிதாசன் இ) முடியரசன் ஈ) கண்ணதாசன்
6. ஒரு பொருளை விளக்க மற்றொரு பொருளை உவமையாகக் கூறுவது --------
   அ) உவமை அணி ஆ) உருவக அணி
   இ) ஏகதேச உருவக அணி ஈ) எடுத்துக்காட்டு உவமை அணி
7. மக்கள் அனைவரும் -------- ஒத்த இயல்புடையவர்கள்.
   அ) பிறப்பால் ஆ) நிறத்தால் இ) குணத்தால் ஈ) பணத்தால்
8. இவை + இல்லாது என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் --------
   அ) இவையில்லாது ஆ) இவை இல்லாது இ) இவயில்லாது ஈ) இவ இல்லாது
9. காயிதே மில்லத் தமிழ்மொழியை ஆட்சிமொழியாக்க வேண்டும் என்று பேசிய இடம் ---------
   அ) சட்டமன்றம் ஆ) நாடாளுமன்றம் இ) ஊராட்சிமன்றம் ஈ) நகர்மன்றம்
10. அடுக்குத் தொடரில் ஒரே சொல் ---------- முறை அடுக்கி வரும்.
    அ) இரண்டு ஆ) மூன்று இ) நான்கு ஈ) ஐந்து

பகுதி – II பிரிவு – 1

II. எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்கவும். 4X2=8

11. நெற்கதிரிலிருந்து நெல்மணியை எவ்வாறு பிரிப்பர்?
12. தாமிரபரணி ஆற்றின் கிளை ஆறுகள் யாவை?
13. நீக்க வேண்டிய களை என்று அறநெறிச்சாரம் எதனைக் குறிப்பிடுகிறது?
14. பொருளீட்டுவதன் நோக்கமாகக் குன்றக்குடி அடிகளார் கூறுவது யாது?
15. சிறந்த நாட்டின் இயல்புகளாக வள்ளுவர் கூறுவன யாவை?
16. விடுதலைப் போராட்டத்தில் காயிதே மில்லத் அவர்களின் பங்கு பற்றி எழுதுக.

பிரிவு – 2

III. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்கவும். 5X2=10

17. உவமை அணிக்கும் எடுத்துக்காட்டு உவமை அணிக்கும் உள்ள வேறுபாடு யாது?
18. உருவக அணியை விளக்குக.
19. ஒரு பெயர்ச்சொல் எப்போது ஆகுபெயர் ஆகும்?



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

20. கலைச்சொல் தருக.

அ) Agriculture ஆ) Ambition

21. மாணவராகிய உங்கள் பொறுப்புகள் இரண்டினை எழுதுக?

22. பின்வரும் தொடரைப் படித்து இரண்டு வினாக்கள் எழுதுக.

பூங்கொடி தன் தோழியுடன் திங்கட்கிழமை காலையில் பேருந்தில் ஏறிப் பள்ளிக்குச் சென்றாள்.

23. கொடுக்கப்பட்ட ஊரின் பெயர்களிலிருந்து புதிய நான்கு சொற்களை உருவாக்குக.

திருநெல்வேலி

## பகுதி – III

IV. அடிமாறாமல் எழுதுக. 3+2=5

24. "பிறப்பொக்கும்......" என தொடங்கும் திருக்குறளை எழுதுக.

25. அ) "மாரியொன்று" – எனத் தொடங்கும் விருந்தோம்பல் பாடலை எழுதுக. (அல்லது)

ஆ) "வாயும்" எனத் தொடங்கி, "சோலை வனம்!" என முடியும் மலைப்பொழிவு பாடலை எழுதுக.

## பகுதி – IV

V. எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி. 3X3=9

26. உழவுத்தொழிலின் நிகழ்வுகளை வரிசைப்படுத்தி எழுதுக.

27. பூதத்தாழ்வார் ஞானவிளக்கு ஏற்றும் முறையை விளக்குக.

28. இரட்டைக் கிளவி, அடுக்குத்தொடர் – ஒப்பிடுக.

29. ஆட்சிமொழி பற்றிய காயிதே மில்லத்தின் கருத்தை விளக்குக.

30. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

திருநெல்வேலி தமிழகத்தின் பழமையான நகரங்களுள் ஒன்று. பழந்தமிழகத்தைச் சேர, சோழ, பாண்டியர் என்னும் மூவேந்தர் ஆண்டு வந்தனர் என்பது நமக்குத் தெரியும். அவர்களுள் பாண்டியர்களின் தலைநகராக மதுரை விளங்கியது. அவர்களது இரண்டாவது தலைநகரமாகத் திருநெல்வேலி விளங்கியது.

வினாக்கள்

அ) தமிழகத்தின் பழமையான நகரம் எது?

ஆ) மூவேந்தர் – தொகைச்சொல் விரித்து எழுதுக.

இ) பாண்டியர்களின் தலைநகராக விளங்கியது எது?

## பகுதி – V

1X6=6

VI. ஒரு பக்க அளவில் விடையளிக்கவும்.

31. அ) உங்கள் ஊரில் நடைபெறும் திருவிழாவைக் காண வருமாறு அழைப்பு விடுத்து உறவினர் ஒருவருக்குக் கடிதம் எழுதுக.

(அல்லது)

ஆ) "ஒற்றுமையே உயர்வு" என்னும் தலைப்பில் கீழ்க்காணும் குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.

குறிப்புகள் : முன்னுரை – பழமொழிகள் – ஒற்றுமையே பலம் – ஒற்றுமையே உயர்வு – ஒற்றுமையுணர்வு – முடிவுரை.

## பகுதி – VI

2X6=12

VII. விரிவாக விடையளிக்கவும்.

32. அ) ஒப்புரவுக்கும், உதவிசெய்தலுக்குமுள்ள வேறுபாடு யாது?

(அல்லது)

ஆ) நீங்கள் ஒரு தலைவராக இருந்தால் எத்தகைய மக்கள் நலப்பணிகளைச் செய்வீர்கள்?

33. அ) "உண்மை ஒளி" படக்கதையைக் கதையாகச் சுருக்கி எழுதுக.

(அல்லது)

ஆ) "பயணம்" – கதையைச் சுருக்கி எழுதுக.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com